**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 82/2021</u>**

பெயர் : ஜெயக்குமார் P.W.1. (Cross)

த/பெ. : முருகையன்

தேதி : 02.02.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –**

1. தாவா சொத்தானது ஒழுகைமங்களம் ஆச்சிகண்ணு அய்யாசாமி அறக்கட்டளைக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த அறக்கட்டளைக்கு எத்தனை நிர்வாகிகள் என்றால் இருவர் உள்ளனர். அந்த அறக்கட்டளை எந்த சட்ட விதிபடி நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த அறக்கட்டளை மயிலாடுதுறை சார்பு நீதிமன்ற மேற்பார்வையில் உள்ளது என்றால் சரிதான். இதற்கு நிர்வாக திட்ட நீதிமன்ற தீர்ப்பு உள்ளது என்றால் சரிதான். மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 98/1970 என்ற வழக்கில் 04.12.1978ல் Scheme Decree உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நீதிமன்றத்தின் மூலம் 5 டிரஸ்டிகளும், 1 மேலாளரும் நியமிக்கபட்டார்கள் என்றால் சரிதான். மேலாளராக மயிலாடுதுறை வழக்கறிஞர் திரு. அழகானந்தன் என்பவரை நியமித்தார்கள் என்றால் சரிதான். 5 டிரஸ்டிகளில் இருவர் வெளி நபர்களாகவும், 3 நபர்கள் ஸ்தாபக குடும்பத்தை சேர்ந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். டிரஸ்டிகளில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தால் நியமிக்கப்படுவார்கள் என மேற்படி தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. டிரஸ்ட் வருமானம் அனைத்தும் பட்டியலிட்டு வங்கி அல்லது அஞ்சல் நிலையத்தில் Deposit செய்யவேண்டும் என்றும், ரூ. 150/–மேல் கையில் பணம் வைத்திருக்க கூடாது என்றும் உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற மேலாளர் அல்லாமல் யாரும் தர்மபாக சொத்தினை குத்தகைக்கு விடகூடாது என மேற்படி தீர்ப்பில் நிபந்தனை எண். 15ல் குறிப்பிபடபட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும், இந்த வழக்கிற்காக தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி தீர்ப்புரையின் நகலை பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்புரையை நான் படித்து பார்க்கவில்லை. கேள்விபட்டு

தான் தெரிந்துகொண்டேன்.

3. நான் தாவா சொத்தை யாரிடமிருந்து குத்தகைக்கு ஒப்பு கொண்டேன் என்றால் எனது தந்தை டிரஸ்டிடமிருந்து ஒப்புகொண்டார். அவரது காலத்திற்கு பிறகு நான் அனுபவித்து வருகிறேன். நான் நேரடியாக தாவா சொத்தை குத்தகைக்கு ஒப்புக்கொண்டேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் எழுதிக்கொடுத்தாக சொல்லும் குத்தகை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்குரையில் எனது தந்தை குத்தகை ஆவணம் ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

4. எந்த வருடம் குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் 50 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்டது. ஆனால் குத்தகை பதிவு 27.11.1998 அன்று ஏற்பட்டது. எனது தந்தை பெயர் முருகையா பிள்ளை ஆகும். எனது தகப்பனார் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஆச்சிகண்ணு அய்யாசாமி பிள்ளை அறக்கட்டளைக்கு எதிராக அ.வ.எண் 113/1991 என்ற வழக்கை தனக்கு தாவா சொத்தில் குத்தகை பாத்தியம் உள்ளது என்றும், அதை பொது ஏலத்தில் விடக்கூடாது என்றும் பரிகாரம் கோரி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு முழு விசாரணைக்கு பின்னர் 19.01.1999ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரங்களை பிரதிவாதி எதிர் வழக்குரையில் 17வது பத்தியின் சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் எனது தந்தைக்கு என்ன பாத்தியம் இருந்ததோ அதை கோருகிறேனா அல்லது அதற்கு மேலும் வேறு உரிமைகள் கோருகிறேனா என்றால் எனது தந்தை கோரிய பாத்தியத்தையே கோருகிறேன். அ.வ.எண் 113/2013 என்ற வழக்கின் தீர்ப்புரையை பிரதிவாதி இநத வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. இவ்வழக்கில் பிரதிவாதி பாலாஜி என்கிற வெங்கடசுப்ரமணியன் தவிர பெருமாள் தாசன், ராம்குமார், பாலமுருகன், தர்மு, மாணிக்கவாசகம், இளங்கோவன் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மனுவில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் என சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை நான் 6 ஏக்கர் 40 செண்ட் விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். அதில் எத்தனை கட்டிடங்கள் உள்ளன என்றால் 2 கட்டிடங்கள் உள்ளன. அந்த கட்டிடத்தின் விபரங்களை வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 2 கட்டிடங்கள் தவிர இந்த வழக்கில் பிரதிவாதி பாலாஜி என்கிற

வெங்கடசுப்ரமணியன் வழக்கிற்கு முன்பு 4 செண்ட் அளவில் ஒரு கூரை வீடு வைத்திருந்தார். அதை தற்போது இடித்துவிட்டு காம்பவுண்டு சுவர் வைத்து Party Office கட்டியுள்ளார். மேற்கூரிய விபரத்தை வழக்குரையிலோ அல்லது கூடுதல் வழக்குரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பாக தாவா சொத்தில் பிரதிவாதி அனுபவித்து வந்த பகுதியின் நீள, அகல விபரத்தை வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு பகுதியை பிரதிவாதி வைத்துள்ளார் என்ற விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

6. வழக்குரையில் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என்ன நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் பிரதிவாதி என்னிடம் Party Office கட்டுவதற்காக அதிகமாக இடம் கேட்டார். நான் மறுத்ததால் அடி ஆட்களை வைத்து எங்களை மிரட்டிவிட்டு அரசியல் பலத்தின் மூலம் தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு வைத்துவிட்டார். மேற்படி விபரத்தை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் வழக்கறிஞர் அணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த அறிக்கையில் தாவா சொத்தில் என்ன என்ன கட்டிடங்கள் உள்ளன என்றும் அதை யார் யார் அனுபவித்து வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த விபரங்களை நான் எனது வழக்குரையிலும், சொத்து விபரத்திலும் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரையின் சொத்து விபரத்தில் 6 ஏக்கர் 40 செண்ட் விஸ்தீரணமும், நான்கெல்லையும் குறிப்பிட்டுள்ளேன். அதில் கட்டிடங்களில் விபரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. தாவா சொத்தின் ஒரு பகுதியை தையல் நாயகி என்பவர் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அதற்கு அருகில் வைக்கோல் போரும், மாட்டுக்கொட்டகையும் இருந்தது என்றால் ஆணையர் வந்து பார்வையிட்ட போது இருந்தது. தற்போது இல்லை. ஆணையர் வரைபடத்தில் 4 என குறிப்பிட்டு தேவகி நடராஜன் குடியிருப்பு வீடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 4 செண்டில் பள்ளிக்கூடமும் சத்துணவு கூடமும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்பில் இருந்தே உள்ளது என்றால் சரிதான். பள்ளிக்கூடத்திற்கு அடுத்த வடக்கால் பிரதிவாதிகளில் அனுபவ இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்தை ஆணையர் வரைபடத்தில் 7, 8 என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

அதற்கு வடபுறம் காலி மனையும் நடைபாதையும் உள்ளது என்றால் சரியல்ல. அங்கு தான் ஒழுகைமங்கலம் கோவிலில் விழா காலங்களில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துவார்கள் என்றால் சரிதான். பேருந்துகள் அந்த சமயத்தில் அங்கு நிறுத்துவார்கள் என்றால் சரியல்ல. அதற்கு வடக்கால் சத்திரம் உள்ளது சரிதான். சத்திரத்திற்கு வடபுறம் பேருந்து நிலையம் உள்ளது என்றால சரிதான். அதற்கு வடபுறம் டிரஸ்டிற்கு சொந்தமான சிமெண்ட் சீட் போட்ட வீடு உள்ளது. இவை அனைத்தும் தாவா சொத்துகளில் உள்ளது என்றால் சரிதான்.

8. தாவா சொத்தினை நான் இருந்து தான் வழக்கறிஞர் ஆணையருக்கு அடையாளம் காண்பித்தேன் என்றால் சரிதான். வரைபடத்தில் எந்த இடத்திலும் சாகுபடி செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீடுகளில் வெளி நபர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் இருவர் வெளி நபர் ஆவார். மற்றவர்கள் டிரஸ்ட்களுக்க வேண்டபட்டவர் ஆவார்கள். தாவா சொத்திற்கு தென்புறம் சங்கர் வீடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கில் மாரியம்மன் கோவில் தோப்பும், வடக்கிலும் கிழக்கிலும் மெயின் ரோடும் உள்ளது. மேற்படி நான்கெல்லை விபரத்தை வழக்குரையில் கூறாமல் தவறான நான்கெல்லையை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் நான்கெல்லைகளாக எதை குறிப்பிட்டுள்ளேன் என்று தற்போது எனக்கு நினைவில் இல்லை. எனக்கு சொத்து அனுபவம் இல்லை என்றாலும், அதனால் தான் தவறான நான்கெல்லையை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**